# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண்.88/2015**

பெயர்: **முருகன்** நாள்: 15.07.2025

பி.வா.சா.2 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.2 – முருகன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம்.12:03</u>

இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்காக நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை ஏதேனும் எனக்கு வந்ததா என்றால், இல்லை. யாருக்காக சாட்சி சொல்ல வந்திருக்கிறேன் என்றால், பிரதிவாதி வெங்கடாசலத்திற்காக சாட்சி சொல்ல வந்திருக்கிறேன். பிரதிவாதி வெங்கடாசலம் அவருக்கு ஆதரவாக சாட்சி அளிக்க என்னை அழைத்ததன் பேரில் நான் வந்துள்ளேன் என்றால், ஆமாம். பிரதிவாதி வெங்கடாசலத்தின் பெரியப்பா மகள் தான் எனது தாயார் என்றால், சரிதான். பிரதிவாதி வெங்கடாசலம் எனக்கு என்ன உறவு என்றால், தாய்மாமன் ஆவார். எனது வாக்குமூலத்தை யார் கூறி எழுதியது என்றால், நான் கூறி எழுதியவை. இந்த வாக்கு மூலத்தில் கூறியுள்ள அனைத்து விவரங்களும் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். வாக்கு மூலத்தில் 1-வது பத்தியில் என்ன கூறியிருக்கிறேன் என்றால், என்னுடைய பெயரை கூறியிருக்கிறேன். 2-வது பத்தியில் என்ன கூறியிருக்கிறேன் என்றால், எதுவும் சொல்லவில்லை. 3-வது பத்தியில் என்ன கூறியிருக்கிறேன் என்றால், எனக்கு சரியாக ஞாபகமில்லை. 4-வது பத்தியில் என்ன கூறியிருக்கிறேன் என்றால், ஞாபகமில்லை. 5-வது பத்தியில் தாவா சொத்தை பற்றி நான் என்ன கூறியிருக்கிறேன் என்றால், எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் என்ன என்று தெரியுமா என்றால், தெரியாது. இந்த வழக்கு எத்தனை வருடங்களாக நிலுவையில் இருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், சுமார் 10 வருடங்களாக நிலுவையில் உள்ளது. எனக்கு வழக்கு சங்கதிகள் எதுவும் தெரியாது என்றும், பிரதிவாதி எனது தாய்மாமன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கு பற்றி எனக்கு தெரிந்திருந்தால் உண்மையாகவே வழக்கின் தன்மையை பற்றி நான் சொல்லியிருப்பேன் என்றும், வெங்கடாசலம் எப்படி சாட்சியம்

அளிக்க வேண்டும் என்று சொன்னாரோ அப்படியே சாட்சியம் அளிக்க வந்ததால் தான் என்னால் வழக்கு பற்றி சரியாக சொல்ல முடியவில்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம்.12:15

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.07.15 12:21:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.